அப்படி அனுமதி பெறுகிற நேரத்தில், துவக்கப்பட இருக்கிற அந்த நிலவள வங்கியில் கடனாளிகள் மற்றும் பயனாளிகள் எத்தனைப் பேர் இருப்பார்கள்; அங்கே எவ்வளவு 'லேவாதேவி' இருக்கும்; அவர்களுக்குக் கடன் தரக்கூடிய வசதிகள் எல்லாம் இருக்கின்றனவா; ஏற்கெனவே இருக்கிற நிலவள வங்கியானது, துவக்கப்பட இருக்கிற நிலவள வங்கியின் காரணமாக பாதிக்குமா என்பன போன்ற நிபந்தனைகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே, இந்த அடிப்படைகளின் காரணமாகத்தான், அவர் கேட்கிற அந்தப் பகுதியில், நிலவள வங்கியைத் துவக்குவதற்கு வசதிகள் இல்லை என்று நான் சொன்னேன். வடாற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் மொத்தம் 9 நிலவள வங்கிகள் உள்ளன. அரக்கோணம், ஆம்பூர், குடியாத்தம், கந்தளி, கே. வி. குப்பம், நெமிலி, திருப்பத்தூர், வேலூர் மற்றும் வாலாஜா ஆகிய இடங்களில், 9 நிலவள வங்கிகள் இருக்கின்றன என்பதை அறிவிக்கிறேன்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நிலவள வங்கியில், கடந்த மூன்று ஆண்டுகளில் எத்தனைப் பேருக்கு எவ்வளவு கடன்கள் வழங்கப்படுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர், நிலவள வங்கியில், கடந்த 3 ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு என்று கேட்டிருக்கிறார். 1991-92 -இல், 174 பயனாளிகளுக்கு ரூ. 20.77 இலட்சமும், 1992-93-இல், 173 பயனாளிகளுக்கு ரூ. 31.40 இலட்சமும், 1993-94-இல், 127 பயனாளிகளுக்கு ரூ. 30.39 இலட்சமும், ஆக மொத்தம் ரூ. 82.56 இலட்சத்திலே, 474 பேர், பயனாளிகளாகப் பயன் பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 257, திரு. எம். கே. சுந்தரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

257—

திருவண்ணாமலை ஒன்றியத்தைப் பிரிக்கும் திட்டம்.

*21042—**திரு. எம். கே. சுந்தரம் :**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை ஒன்றியம் அதிகமாக ஊராட்சிகளை உள்ளடக்கியுள்ளதால், நிர்வாக வசதிக்காக அதனைப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

1994 ஏப்ரல் 11]

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு பிரிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

திரு. எம். கே. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம், தமிழகத்தினுடைய முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய புனித அரசிலே, நிர்வாகத்தினுடைய நலன் கருதி, இன்றைக்குப் பல மாவட்டங்களைத் தன்னுடைய பொற்கரத்தாலே, இரண்டாகப் பிரித்து, அந்தந்த மாவட்ட மக்களுடைய குறைகளைத் தீர்த்துக் கொண்டிருக்கிற அரசு, புரட்சித் தலைவியினுடைய புனித அரசு என்பதை இன்றைக்கு நிருபித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பொன்மாதா ஆட்சி புரிகிற இந்தப் புனித நாளிலே, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை என்பதை மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். திருவண்ணாமலை ஒன்றியம், 69 ஊராட்சி மன்றங்களையும், ஏறத்தாழ 1,08,887 மக்களையும் உள்ளடக்கிய ஒன்றியமாக இருக்கிறது. அங்கே, ஊராட்சி மன்றங்கள் அதிகமாக இருக்கிற காரணத்தினாலும், மக்கள் தொகை அதிகமாக இருக்கிற காரணத்தினாலும், ஊராட்சி ஒன்றிய தலைமையிடமான திருவண்ணாமலைக்கு வருவதற்கு, மக்களிடையே போக்குவரத்திற்குச் சிரமமாக இருக்கிற காரணத்தினாலும், தயவுகூர்ந்து அமைச்சர் அவர்கள், இதை மறுபரிசீலனை செய்து, திருவண்ணாமலையை இரண்டாகப் பிரிப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அத்தனை விவரங்களும் உண்மை. இருந்தாலும், இன்றைக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டம் 73–வது திருத்தச் சட்டத்தின்படி, தமிழ்நாடு ஊராட்சியினுடைய சட்டம் 1958 திருத்தியமைக்கப்பட இருக்கின்ற காரணத்தினாலும், அந்தத் திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலே ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகள் போன்றவற்றை அமைத்தல், பிரித்தல், தரம் உயர்த்துதல் போன்ற கருத்துக்களை தமிழ்நாடு ஊராட்சிகள் திருத்தியமைக்கப்பட்டு, ஊராட்சி அமைப்புகள் பொறுப்பேற்கும் வரை தள்ளி வைக்கலாம் என்ற கருத்துரு வெளியிடப்பட்டிருக்கிறது. எனவே,

இந்தச் சூழ்நிலையில் வினாவில் கூறியிருக்கின்ற பொருள் தொடர்பாக தற்போது நடவடிக்கை எடுக்க இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். கே. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல் அப்படிச் சொல்கின்ற சட்டத்திருத்தம் ஏற்படுத்தப்பட்டவுடன் திருவண்ணாமலை ஒன்றியத்தை முன்னுரிமை தந்து, பிரிப்பதற்காக ஆவன செய்வாரா என்பதையும், அதற்கான காரணம் இன்றைக்குப் பிரிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்படுகின்ற இந்தத் திருவண்ணாமலை ஒன்றியம் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தையொட்டி இருக்கின்ற ஒரு ஒன்றியமாகும். அந்த ஒன்றியத்திலே இருக்கின்ற மக்கள் இன்றைக்கு சம்பந்தமில்லாத பகுதியிலே இருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் இன்றைக்கு திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்ட திருவண்ணாமலை ஒன்றியம் என்ற ஒரு பகுதியை ஏற்படுத்த வேண்டும். தச்சம்பட்டு, தளையாம்பள்ளம், அண்டம்பள்ளம், விரையூர் போன்ற பகுதியிலே மேலே குறிப்பிட்ட மாவட்டத்திற்கு அருகாமையிலே இருக்கின்ற பகுதிகளை ஒரு கூறாக பிரித்து அங்கே இருக்கின்ற மக்களுடைய நலன் கருதி அமைச்சர் கூறுகின்ற சட்டப் பிரச்சினை தீர்ந்தவுடன் அதற்கான அனுமதி பெற்று இந்தத் திருவண்ணாமலை ஒன்றியத்தை பிரிப்பதற்கு முன் அனுமதி தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல் இதில் எந்தவிதமான முன்அனுமதி என்ற பேச்சுக்கே இடமில்லை. சட்டத்திருத்தம் மேற்கொண்ட பிறகுதான் இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்ள முடியும். ஆக அரசியலமைப்புச் சட்டத்தில் தனித்தனி சரத்துக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்டத்திருத்தத்தின் வாயிலாக ஒரு ஊராட்சி ஒன்றியத்தை அமைக்கின்ற பொறுப்பும், பிரிக்கின்ற பொறுப்பும், தரம் உயர்த்துகின்ற பொறுப்பும் 'எலெக்ஷன் கமிஷன்' தேர்தல் ஆணையம், இதற்கென தனியாக அமைக்கப் பட்டிருக்கிறது. அந்த ஆணையம்தான் இதைச் செய்ய வேண்டியிருக்கிற காரணத்தினால், அதற்குண்டான பரிந்துரையை அரசு மேற்கொள்ளும். அந்தச் சமயத்தில் இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளலாம். அப்படி உண்மையாகவே இந்த ஊராட்சி ஒன்றியம் பிரிக்கப்பட வேண்டுமென்ற நிலைமை, அங்கு இந்தப் பிரச்சினை இருக்குமானால், நிச்சயமாக அரசு அதற்கு முன்னுரிமை கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1994 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 258, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

258—

கணியம்பாடி ஒன்றியத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

* *21309*—திரு. தா. வேடியப்பன் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கணியம்பாடி ஒன்றியம், நஞ்சுகொண்டாபுரம் கிராமத்திற்கும் சோழவரம் கிராமத்திற்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கணியம்பாடி ஒன்றியம் நஞ்சுகொண்டாபுரம் கிராமத்தில் *60,000* லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்னிறைப்பான் திட்டம் நல்லமுறையில் முடிக்கப்பட்டு இயங்குவதால் இக்கிராமத்திற்கு புதிதாக குடிநீர் திட்டம் தேவையில்லை. கணியம்பாடி ஒன்றியத்தைச் சேர்ந்த சோழவரம் கிராமத்தில் நடப்பு நிதியாண்டில் *(1993-94)* முடுக்கிவிடப்பட்ட கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் சோழவரம் மற்றும் காலனிக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு என்னுடைய போளூர் ஒன்றியம், கணியம்பாடி ஒன்றியம், இரண்டு ஒன்றியங்களிலுமே ஏறத்தாழ *67* மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு மேலே கட்டி ஒவ்வொரு கிராம அடித்தள மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகளை சாலை வசதி, குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி போன்றவற்றை சிறப்பான முறையில் வழிவகுத்து கொடுத்திருக்கிறது நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு. அதே வழியில் இந்தக் கிராமத்திற்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்ததற்கு நன்றி தெரிவித்து, சோழவரம், அடுத்து பெண்ணாத்தூர், பாலாத்து வண்ணான் என்று மூன்று ஊராட்சிகளுக்கு மட்டும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுத்துவிட்டால், அந்தக் கணியம்பாடி ஒன்றியமே நீர் நிறைந்த ஒன்றியமாக தேர்வு செய்யப்படும். இந்த மூன்று கிராமங்களுக்கும் இந்தக் குடிநீர் பிரச்சினையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீர்த்து வைப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.